**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திரு. சுரேஷ்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.10.2023**

எதிரி1 ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆனையூர், இலங்கை அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியைத் தெரியும். அவர் அசா1 ன் மகளைத் திருமணம் செய்துள்ளார். 2 வது எதிரியானவர், 1 வது எதிரியின் அம்மா ஆவார். கடந்த 31.08.2014 ம் தேதியன்று சேலம், ஓமனூர் வட்டம், பாவளத்தானூரில் வைத்து ஆஜர் 1 வது எதிரிக்கும், சாருலதாவிற்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது, 8 பவுன் நகையும், பணம் ரூ.50,000/- ரொக்கமும் கொடுத்தார்கள். திருமணம் முடிந்து சுமார் 1 ½ ஆண்டு காலம் 1 வது எதிரியும், சாருலதாவும் நல்லபடியாக இருந்தார்கள். அவர்களுக்கு 11 மாத ஆண் குழந்தை இருந்தது.

அதன்பின்னர், 1 வது எதிரி, சாருலதாவின் மீது சந்தேகப்பட்டுக்கொண்டு, 1 வது எதிரியின் தூண்டுதலின் பேரில், அவரது அம்மா 2 வது எதிரி சாருலதாவிடம், பணம் ரூ.1 லட்சம் ரொக்கமும், பிரிட்ஜ், வாஷிங்மெஷின் வாங்கிவரச் சொல்லி கேட்டார்கள். தெய்வேந்திரன் எனக்கு சித்தப்பா. அவரும் நானும் ஒன்றாக வேலைபார்க்கிறோம். இந்த விஷயங்களை தெய்வேந்திரன் தான் என்னிடம் சொன்னார். 1 வது எதிரிக்கும் சாருலதாவிற்கும் இடையே சண்டை நடந்து, 1 வது எதிரியின் வீட்டிலேயே சாருலதா தூக்கு மாட்ட முயற்சி செய்து, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவரைக் காப்பாற்றிவிட்டார்கள் என்று தெய்வேந்திரன் என்னிடம் சொன்னார். அதன்பிறகு, தெய்வேந்திரன் 1 வது எதிரியின் வீட்டிற்குச் சென்று, சாருலதாவையும், அவரது பேரனையும் மதுரைக்கு அழைத்து வந்துவிட்டதாக என்னிடம் தெய்வேந்திரன் சொன்னார். கொஞ்ச காலம் சாருலதாவும், அவரது மகனும் மதுரையில் தான் இருந்தார்கள். தெய்வேந்திரனும், என் அம்மா வசந்தாவும் சாருலதாவையும், குழந்தையையும், 1 வது எதிரியின் வீட்டிற்குக் கொண்டு சென்று விடப்போனார்கள். அப்போது, அவர்கள் தாங்கள் கேட்ட வரதட்சணைப் பணமும், பொருளும் கொடுத்தால் வாருங்கள் என்றும் இல்லை என்றால் திரும்பி அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்னதாக தெய்வேந்திரன் என்னிடம் சொன்னார். பணம் கொடுக்காததால், சாருலதா தனது பெற்றோர் வீட்டிலேயே இருந்தார். அப்போது 1 வது எதிரி சாருலதாவிற்கு அடிக்கடி போன் செய்து தொந்தரவு செய்துள்ளதாக தெய்வேந்திரன் என்னிடம் சொன்னார். அதாவது தொந்தரவு என்றால், சாருலதாவிற்கு வேறு ஒருவருடன் தொடர்பு உள்ளதாக சொல்லி சந்தேகப்பட்டு சொல்லி தொந்தரவு செய்துள்ளார். திரும்ப திரும்ப 1 வது எதிரி தொந்தரவு செய்ததால், சாருலதா மனம்

வருத்தம் தாங்கமுடியாமல், 21.05.2016 ம்தேதியன்று வாஸ்மால் 3 பாட்டில் வாங்கி குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்று தெய்வேந்திரன் என்னிடம் சொன்னார். 02.06.2016 ம்தேதியன்று அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து சாருலதா இறந்துவிட்டார் என்று தெய்வேந்திரன் என்னிடம் சொன்னார். 30.05.2016 ம் தேதியன்று காவல்நிலையத்தில் தெய்வேந்திரனும், பாரதிதாசனும் புகார் கொடுத்தார்கள் என்று தெய்வேந்திரன் சொன்னார். 30.05.2016 ம் தேதியன்று காவல் ஆய்வாளர் என்னை கூப்பிட்டு விசாரித்தார். சாருலதா இறந்த 2 நாட்கள் கழித்து காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

ஆனையூர் அகதிகள் முகாமில் மொத்தம் சுமார் 500 சொச்சம் குடும்பங்கள் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு எங்கள் முகாமில் இருந்து எத்தனை குடும்பங்கள் வந்தார்கள் என்றால் பெரிய பஸ் பிடித்து சென்றோம். சுமார் 57 பேர் வந்தார்கள். அந்த 57 பேரில், உறவினர்கள் தவிர மற்றவர்களும் வந்தார்கள் என்றால் சரிதான். வரதட்சணையாக கொடுத்த ரூ.50,000/- பணத்தை எங்கு வைத்து கொடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. சாருலதாவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கும்போது நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. சிறிது நேரத்தில் போய்விட்டேன். நான் சென்று பார்த்தபோது மருத்துவமனையில் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சாருலதாவைப் பார்த்தேன். அவர் பேச முடியாத நிலையில் இருந்தார். அதனால் சம்பவம் பற்றி அனைத்து விஷயங்களையும் எனக்கு சாருலதாவின் அப்பா தெய்வேந்திரன் சொல்லித்தான் எனக்குத் தெரியும். RDO அம்மா விசாரிக்கும் போது

நான் உடன் இருந்தேன். யார் யாரை RDO அம்மா விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். தெய்வேந்திரன், பாரதிதாசன், நான், உதயக்குமார், சுரேந்திரன், வசந்தா, சாருலதாவின் அம்மா சித்ரா, ஆகியோரை விசாரித்தார்கள். அவர்கள் RDO விடம் என்ன சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்குச் சென்ற 57 பேரில், பொதுவானவர்களை விட்டுவிட்டு, நான் சாருலதாவிற்கு உறவினர் என்ற முறையில், என்னை சாட்சியாகப் போட்டு, நான் கேள்விப்படாத விஷயத்தை கேள்விப்பட்டததாக தற்போது உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்ட சாட்சியம் என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் என்னுடைய சாட்சியம் இந்த வழக்கிற்கு தொடர்புடையதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 4** |
| **Name** | **:** | **திரு. சந்துரு** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.10.2023**

எதிரி1 ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆனையூர், இலங்கை அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். அசா1 என் அம்மா. வழக்கில் இறந்த சாருலதா என் உடன்பிறந்த அக்கா. ஆஜர் 1 வது எதிரி எனது அக்காவின் கணவர். 2 வது எதிரி என் அக்காவின் மாமியார். 30.08.2014 ம் வருடம் என் அக்காவிற்கும், 1 வது எதிரிக்கும் சேலத்தில் வைத்து திருமணம் நடந்தது. பணம் ரூ.50,000/- ரொக்கமும், 8 பவுன் நகையும் திருமணத்தின் போது கொடுத்தோம். சுமார் 1 ½ வருடங்கள் 1 வது எதிரியும், என் அக்காவும் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை மோனிஷ் பிறந்தான். அதன்பிறகு என் அக்கா மருந்துகுடிப்பதற்கு 1 ½ மாதத்திற்கு முன்னர் என் அக்காவை என் அப்பா எங்கள் வீட்டிற்கு கூட்டிவந்துவிட்டார்கள். என்ன காரணம் என்று என் அப்பாவிடம் கேட்டதற்கு, என் அக்காவிடம் 1,2 எதிரிகள் பணம் 1 லட்சம் ரொக்கமும், பிரிட்ஜ், பீரோ போன்ற பொருட்களும் வேண்டும் என்று

கேட்டார்கள் என்றும் தேவையில்லாமல் பேசியதால் என் அக்கா 1 வது எதிரியின் வீட்டில் இருக்கும் போது என் அக்கா தூக்குப்போட முயற்சி செய்யதாகவும், அக்கம் பக்கம் இருந்தவர்கள் என் அக்காவைக் காப்பாற்றிவிட்டார்கள் என்றும் பின் என் அக்கா, என் அப்பாவிடம் சொல்லி என் அக்காவை என் அப்பா கூப்பிடப்போனார். என் அப்பாவிடம், 1,2 எதிரிகள், இங்கிருந்து என் அக்காவை அழைத்துச் செல்லவில்லை என்றால் பிணமாகத்தான் பார்ப்பீர்கள் என்று சொன்னதாக என் அக்கா என்னிடம் சொன்னார். என் அக்காவை எங்கள் வீட்டிற்கு வந்த பின்னர், 1 வது எதிரி என் அக்காவிற்கு செல்போனில் தேவையில்லாமல் பேசி, இன்னொருவருடன் நீ தொடர்பில் உள்ளாய் என்றும், அதனால் தான் நீ ஆனையூர் போகிறாய் என்றும் நீ பெற்றுள்ள குழந்தை எனக்குப் பிறக்கவில்லை என்றும் ஒவ்வொரு நாளும் இரவு பேசி என் அக்காவிற்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதாக என் அக்கா என்னிடம் சொன்னார். அதன் பிறகு என் அக்கா தொல்லை தாங்க முடியாமல், கடந்த 21.05.2016 ம் தேதியன்று என் அம்மா வெளியே சென்றவுடன் 3 பாட்டில் சூப்பர் வாஸ்மால் வாங்கி குடித்துவிட்டார். என் அம்மா வீட்டிற்கு வந்தபிறகு கட்டிலுக்கு அடியில் 3 பாட்டில் இருப்பதைப் பார்த்துவிட்டு எனக்கு போனில் சொன்னார். அதன்பிறகு என் அம்மா, என் அக்காவை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார். அதன் பிறகு, என் அப்பா எங்கள் வீட்டில் தலையணைக்கு அடியில் இருந்து, என் அக்கா கைப்பட எழுதிய கடிதத்தை 22.05.2016 ம் தேதியன்று எடுத்ததாக என் அப்பா சொன்னார். அன்றைய தினமே அந்த கடிதத்தை என்னிடம் காண்பித்தார். அது அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 30.05.2016 ம்தேதி நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல்துறையில் இருந்து அன்றைய தினமே எங்களை விசாரித்தார்கள். அதன்பிறகு 02.06.2016 ம்தேதி என் அக்கா மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார். என் அக்கா இறந்த அன்றைய தினமே உதவி ஆணையர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

எனக்குத் திருமணம் ஆகிவிட்டது. என் அக்கா சாருலதா திருமணம் ஆகி சுமார் 1 ½ வருடம் எதிரியின் வீட்டில் தான் வசித்துவந்தார்கள் என்றால் சரிதான். இடையில் தீபாவளிக்கு எங்கள் வீட்டிற்கு வந்துள்ளார்கள். 1 ½ ஆண்டுகள் என் அக்காவும் 1 வது எதிரியும் சந்தோஷமாக இருந்தார்கள் என்ற விபரம் என் அக்கா சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 23.06.2015 ம் தேதி என் அக்காவிற்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு என் அக்கா சாருலதா சேலத்திற்குச் செல்லவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. சேலத்தில் என் அக்கா தூக்குமாட்ட முயற்சி செய்தபோது அவரைக் காப்பாற்றிய அக்கம் பக்கத்தினர் யார் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. என்ன காரணத்திற்காக தூக்குமாட்டினார் என்று காப்பாற்றிய அக்கம் பக்கத்தினரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். நான் இந்தியாவில் தான் பிறந்தேன். 1 வது எதிரி இந்தியாவில் தான் பிறந்தார் என்றால் எனக்குத் தெரியாது. எங்கள் சம்பிரதாயப்படி வரதட்சணை கேட்கும் பழக்கமோ, கொடுக்கும் பழக்கமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது திருமணத்திற்கு நான் வரதட்சணை வாங்கவில்லை. இந்தியாவில் வரதட்சணை வாங்குவது குற்றம் என்பது எனக்குத் தெரியும். பணம் ரூ.1 லட்சமும், பொருட்களும் எந்த தேதியில் எதிரிகள் கேட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. திருமணம் ஆகி 1 ½ வருடம் என்பது 2016 ம் வருடம் பிப்ரவரி என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது, என் அக்கா பேசிய செல்போனை கொடுத்தேனா என்றால் இல்லை. என் அம்மா என்னிடம் தொலை பேசியில் சொல்லி, நான் என் அம்மா வீட்டிற்கு போவதற்கு முன்னதாகவே என் அக்காவை என் அம்மா ஆஸ்பத்ரியில் சேர்த்துவிட்டார். சூப்பர் வாஸ்மால் என்பதை என் அம்மாவும், டாக்டரும் சொல்லி தெரிந்து கொண்டேன். அதசாஆ.1 கடிதம் வீட்டில் இருந்ததாக என் தகப்பனார் என்னிடம் சொல்லாமல் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். என் அக்கா சாருலதா 12 ம் வகுப்பு முடித்து, கல்லூரி பாதிபடிப்பு

படித்துக்கொண்டு இருந்தார். என் அக்கா படிக்கும்போது நோட்டு, புஸ்தகங்கள் உபயோகித்தார் என்றால் சரிதான். அந்த நோட்டு, புத்தகத்தில் என் அக்கா கைப்பட எழுதியிருப்பார் என்றால் சரிதான். இது தான் என் அக்காவின் கையெழுத்து என்று கல்லூரி அல்லது பள்ளியில் என் அக்கா பயன்படுத்திய நோட்டு அல்லது புத்தங்களை போலிசார் விசாரணையின் போது கொடுக்கவில்லை. அதசாஆ.1 கடிதத்தை என் அப்பா, எங்குவைத்து எந்த தேதியில் காட்டினார் என்றால் என் அக்கா மருந்து அருந்திய அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் வைத்து காட்டினார். என் அக்கா விஷயம் அருந்தி 12 நாட்கள் கழித்து தான் இறந்தார் என்றால் சரிதான். அதாவது புகார் கொடுத்த பிறகு 2 நாட்கள் கழித்து தான் என் அக்கா இறந்தார் என்று சொன்னால் சரிதான். புகார் கொடுக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. என் அக்காவுடன் ஆஸ்பத்திரியில் இருந்தேன். என் அப்பா புகார் கொடுக்க ஆஸ்பத்திரியில் இருந்து காவல்நிலையத்திற்கு போகும்போது, அதசாஆ.1 கடிதத்தையும் காவல்நிலையத்தில் கொடுக்கவேண்டும் என்று நான் என் அப்பாவிடம் சொன்னேன். அதசாஆ.1 கடிதத்தையும் புகார் கொடுக்கும்போது என் அப்பா எடுத்துச் சென்றார். என் அக்கா சாருலதா, இரவு நேரங்களில் கைபேசியில் பேசியது 1 வது எதிரியுடன் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வேறு யாருடையோ பேசிக்கொண்டு இருக்கிறாய் என்றும் அதனால் தான் சேலத்திற்கு வரமாட்டேன் என்கிறாய் என்று சொல்லி அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போனவர் என் சகோதரி என்பதால், என் குடும்பத்தார்கள் ஆலோசனை செய்து, 1 வது எதிரி அவரது குழந்தையைக் கேட்கிறார் என்றும் அதைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் என் அக்கா சூப்பர் வாஸ்மால் குடிக்கவில்லை என்றும், இந்த வழக்கிற்காக எங்கள் குடும்பத்தார்கள் அனைவரும் ஆலோசனை செய்து அவ்வாறு சொல்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டாரும் 1 ½ வருமாக சந்தோஷமாக

வாழ்ந்த என் அக்கா, அவரது கணவர் வீட்டிற்குப் போகமாட்டேன் என்கிறாள் என்று கோபமாக இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆனையூர் முகாமில் உள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவும், ஒற்றுமையாகவும் தான் இருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் தரப்பில் என் அக்காவிற்கு வரதட்சணை கேட்டு தொந்தரவு கொடுத்திருந்தால், ஒற்றுமையாக இருக்கும் எங்கள் முகாமில் இருக்கும் அனைவருக்கும் தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். பாரதிதாசன் என் அப்பாவிற்கு நெருங்கிய நண்பர் மற்றும் சாதாரண பழக்கம் உள்ள அனைவருக்கும் வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்த விபரம் தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்பதால் தான், நடுநிலையில் உள்ளவர்களைக் கேட்டால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான், எங்கள் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களை மட்டும் இந்த வழக்கில் சாட்சியாக போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பணம் ரொக்கம் கொடுத்தது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியும். RDO விசாரணையின் போது நான் கலந்துகொண்டேன். வரதட்சணையாக பணம் என் அம்மா கொடுக்கும்போது நான் இருந்தேன் என்று RDO விசாரணையின் போது சொல்லியுள்ளேன். திருமண சமயத்திலும், என் சகோதரியின் மரணத்தின் வரையும் வரதட்சணை பற்றி எங்கும் நாங்கள் புகார் கொடுக்கவில்லை. சேலத்திற்கு எதிரிகள் குடியிருந்த வீட்டிற்கு என் பெற்றோர் சென்றுள்ளார்கள். நான் சென்றது இல்லை. அதனால் நடந்த விஷயங்கள் எதுவும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும் வீட்டில் என்ன சொல்லச் சொன்னார்களோ அதை தற்போது சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரி வேறு ஒருவருடன் தொடர்பில் இருந்தார் என்பதைத் தெரிந்து, அதை மறைத்து எதிரிகள் மீது தவறாக வழக்கு போட்டு உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அக்கா சாருலதாவை எங்கள் பெற்றோர் வற்புறுத்தி அவரது கணவருடன் செல்ல வற்புறுத்தியதால்., என் அக்கா எதிரிகள் வீட்டிற்குச் செல்ல மனமில்லாமல் தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு என் அக்காவை என்னுடன் வா அல்லது குழந்தையை என்னிடம் கொடு என்று 1 வது எதிரி கேட்டார் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. அவ்வாறு கேட்டதாக என் தாயாரும், பாரதிதாசனும் இந்நீதிமன்றத்தில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சொன்னது போல் எதிரிகள் தரப்பில் வரதட்சணை கேட்டோ, பிரிட்ஜ் போன்ற உபகரணங்கள் கேட்டு தொந்தரவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எதிரிகள் கேட்டிருந்தால், அவ்வாறு கேட்கப்பட்ட சம்பவ இடமான சேலத்தில் உள்ள காவல்நிலையத்தில் நாங்கள் புகார் அளித்திருப்போம் என்றும் அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரியின் மரணத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை